நிதித்துறையில்
நாணயம் மிக்க நண்பன்
ஷப்றா
207, மின்சார நிலைய வீதி
யாழ்ப்பாணம்.

பக்கங்கள் 4

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

YOUR FRIENDS IN FINANCE
SHABRA
2, R. A. De Mel Mawatte,
COLOMBO - 4.
Telephone:- 508087—90

சுடர்: 6 திருவள்ளுவர் ஆண்டு 2022 புரட்டாதி 01. செவ்வாய்க்கிழமை (17-09-1991) UTHAYAN — A Lively National Tamil Daily கதிர்: 287

# பிரேமாவிற்கு எதிரான பிரேரணை:

# விவாதிக்க சபாநாயகர் அனுமதி!

## நாடாளுமன்றை கலைக்கும் சாத்தியமில்லை

கொழும்பு, செப். 17

நாடாளுமன்றத்தைக் கலைத்து பொதுத் தேர்தல் நடத்தும் எண்ணம் ஐக்கிய தேசியக் கட்சிக்கு தற்போது இல்லை என்று அக்கட்சி வட்டாரங்களை ஆதாரம் காட்டி கொழும்பில் அரச சார்பு பத்திரிகை செய்தி வெளியிட்டிருக்கிறது.

(இ-எ)

## ஜனாதிபதிக்கும் அறிவிப்பு

கொழும்பு, செப்டெம்பர் 17

ஜனாதிபதி பிரேமதாஸா மீது கொண்டு வரப்பட்டுள்ள அரசியல் குற்றப் பிரேரணையை நாடாளுமன்றத்தில் விவாதத்திற்கு எடுத்துக் கொள்வதற்கான அனுமதியை சபாநாயகர் எம். எச். முகம்மது வழங்கியிருக்கிறார்.

ஜனாதிபதி பிரேமதாஸாவுக்கு எழுதிய கடிதம் ஒன்றில் சபாநாயகர் முகம்மது இதனைத் தெரிவித்திருக்கிறார்.

"தம்மீது கொண்டு வரப்பட்டுள்ள அரசியல் குற்றப் பிரேரணை காலாவதியாகி விட்டதாக சட்டமா அதிபர் தமக்கு ஆலோசனை கூறியிருப்பதாகவும்—

ஆகவே நாடாளுமன்றத்தைக் கலைப்பதற்கு தம்மைத் தடுக்கும் சட்ட விதி செயலிழந்து விட்டதாகவும் ஜனாதிபதி பிரேமதாஸ வாரஇறுதியில் சபாநாயகருக்கு கடிதம் மூலம் அறிவித்திருந்தார்.

அதற்கு பதிலளிக்கு முகமாகவே சபாநாயகர் ஜனாதிபதிக்கு கடிதம் அனுப்பியிருக்கிறார்.

ஜனாதிபதி மீது கொண்டு வரப்பட்டுள்ள அரசியல் குற்றப் பிரேரணை அரசியல் சாசனத்தின் சகல விதிகளுக்கும் கட்டுப்பட்டதாகவும், அரசமைப்பில் குறிப்பிடப்பட்ட சகல தேவைகளையும் பூர்த்தி செய்வதாகவும் அமைந்துள்ளது. ஆகவே அப்பிரேரணையை நாடாளுமன்றத்தில் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ள அனுமதி வழங்கி

[3 ஆம் பக்கம் பார்க்க]

## முச்சந்தி முரளி



உவை அமைச்சர்மாருக்கும் இப்பதான் ஞானம் பிறக்குது போலை...!

## சிப்பாய் கால் இழப்பு

யாழ்ப்பாணம், செப். 17

திருகோணமலை மாவட்டத்திலுள்ள இறக்கக்கண்டி இராணுவ முகாமில் இருந்து ரோந்து சென்ற படையினர் புலிகளின் மிதி வெடியில் சிக்கினர். அதில் சிப்பாய் ஒருவர் தனது காலை இழந்தார்.

(உ-3)

## தாண்டிக்குளம் அருகே நேற்று குண்டு வெடிப்பு!

### எட்டுப் பயணிகள் காயம்

யாழ்ப்பாணம், செப். 17

வவுனியா தாண்டிக்குளம் அருகே ஓமந்தை மாணிக்க வளவுப் பகுதியில் நேற்றுக் காலை 9.45 மணியளவில் இடம்பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவம் ஒன்றில் எட்டுப் பயணிகள் காயமடைந்தனர்.

பயணிகள் தரிப்பு நிலையத்

[3 ஆம் பக்கம் பார்க்க]

## மணலாறுச் சண்டையில் படையினர் பலர் உயிரிழப்பு!

### பெருமளவு ஆயுதங்கள் புலிகளால் மீட்பு

கொழும்பு, செப். 17

மணலாறு காட்டுப் பகுதியில் முன்னேற முயன்று வரும் ஸ்ரீலங்கா இராணுவப் படையினர் விடுதலைப் புலிகளின் கடும் எதிர்ப்பினால் நிலை குலைந்திருப்பதாக சுயாதீன செய்தி வட்டாரங்கள் தகவல் வெளியிட்டன.

காட்டுப்பகுதியில் புலிகள், பெரும் எண்ணிக்கையில் பரவலாக மறைத்து வைத்திருக்கும் கண்ணிவெடிகள் மற்றும் மிதிவெடிகளினால் ஸ்ரீலங்காப் படையினருக்கு எதிர்பாராதளவு பெரும் சேதம் ஏற்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சண்டையில் காயமடையும் படையினர் அநுராதபுரம், வவுனியா, திருகோணமலை, கொழும்பு ஆஸ்பத்திரிகளுக்கு அதிக எண்ணிக்கையில் கொண்டுவரப்பட்டவண்ணம் இருப்பதாகவும் தெரிய வருகிறது.

காட்டுப் பகுதியில் விடுதலைப் புலிகள் கையாண்டு வரும் யுத்த தந்திரங்கள் ஸ்ரீலங்காப் படையினரைத் திணறச் செய்திருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

கடந்த ஞாயிறு இடம்பெற்ற சண்டையில் அரசுப் படையினர் 16 பேர் படுகாயமடைந்தனர் என்று கொழும்பில் தெரிவிக்கப்பட்டது.

[4 ஆம் பக்கம் பார்க்க]

## தமக்குள்ள அதிகாரம் குறித்து அமைச்சர்கள் அதிருப்தி!

கொழும்பு, செப். 17

தற்போதைய ஆட்சி முறையில் தமது அதிகாரங்கள் கட்டுப்படுத்தப்பட்டுள்ளமை குறித்து அமைச்சர்களும் துணை அமைச்சர்களும் அதிருப்தி கொண்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

கடந்த வியாழக்கிழமை பிரதமர் டி. பி. விஜேதுங்கா தலைமையில் அமைச்சர்கள், துணை அமைச்சர்கள், திட்ட அமைச்சர்கள் மற்றும் எம். பிக்கள் கலந்து கொண்ட மாநாட்டில் இது சம்பந்தமாகக் கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டன என்று 'சண்டே டைம்ஸ்' செய்தி வெளியிட்டுள்ளது.

இரவு 8 மணியளவில் முடிவடைவதாக இருந்த இந்த மாநாடு, விவாதம் காரணமாக இரவு 11-20 வரை நீடித்தது.

தங்கள் அதிகாரங்கள் கட்டுப்படுத்தப்பட்டுள்ளமை குறித்து மாநாட்டில் பல அமைச்சர்களும், துணை அமைச்சர்களும் முறையிட்டனர்.

தங்கள் பிரச்சினைகளுக்கு அவசரத் தீர்வு காணப்பட வேண்டும் என்றும் அவர்கள் கேட்டுக் கொண்டனராம்.

வெளியார்கள் தங்கள் கடமைகளில் தலையிடுவதாக

[3 ஆம் பக்கம் பார்க்க]

## லலித் ஆதரவாளர்களுக்கு சி. ஐ. டியினர் தொந்தரவு

கொழும்பு, செப். 17

ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து வெளியேற்றப்பட்ட எம். பிக்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்டவர்களின் வீடுகளுக்கு இரகசியப் பொலிஸார் சென்று விசாரணை நடத்தி வருகின்றனர்.

முன்னாள் அமைச்சர்களான காமினி திஸாநாயக்காவும், லலித் அத்துலத்முதலியும் கடந்த வெள்ளிக்கிழமை நடந்த பத்திரிகையாளர் மாநாட்டில் மேற்கண்டவாறு குற்றஞ்சாட்டினர்.

பத்திரிகையாளர் மாநாட்டில் திரு. காமினி திஸாநாயக்கா பேசும் போது, கடந்த வியாழக்கிழமை நள்ளிரவு, பாதுகாப்புப் படையினர் என்று கூறிக் கொண்ட 4 பேர் பொலிஸ் ஜீப் ஒன்றில் தமது பாதுகாப்பு உத்தியோகத்தரின் வீட்டுக்குச் சென்றதாகவும் —

அங்கு அவரின் மனைவியையும் படுக்கையிலிருந்த குழந்தையையும் எழுப்பி அந்தப் பாதுகாப்பு உத்தியோகத்தர்

[3 ஆம் பக்கம் பார்க்க]

## எப்படியான ஆட்சிமுறை வேண்டும்?

## பகிரங்கமாக விவாதிக்க வருமாறு லலித் சவால்!

கொழும்பு, செப் 17

"நாட்டுக்கு நாடாளுமன்ற ஜனநாயக முறை தேவையா அல்லது நிறைவேற்று ஜனாதிபதி முறை தேவையா என்பது குறித்து டெலிவிஷனிலும், வானொலியிலும் நேரில் விவாதம் ஒன்றை நடத்தத் தயாரா?"

—இப்படி முன்னாள் அமைச்சர் லலித் அத்துலத்முதலி அரசாங்கத்துக்கு சவால் விட்டிருக்கிறார்.

இத்தகவலை 'சண்டே ஐலண்ட்' வெளியிட்டுள்ளது.

அரசியல் குற்றப்பிரேரணை காலாவதியாகி விட்டது என்ற சட்டமா அதிபரின் ஆலோசனை குறித்து திரு. லலித் அத்துலத்முதலி கருத்துத் தெரிவிக்கையில், அரசியல் குற்றப் பிரேரணை ஜனாதிபதியை எதிரியாக்கியுள்ளது என்றும், எதிர் தரப்பின் சட்டத்தரணியாகத் தான் சட்டமா அதிபர் விளங்குவார் என்றும் கூறினார்.

(இ-எ)

## துணைப்படையினரும் மணலாறுக் களத்தில்!

புதுக்குடியிருப்பு, செப். 17

மணலாறுப் பகுதியில் நடைபெற்று வரும் கடும் யுத்தத்தில், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு உதவியாக துணைப்படையைச் சேர்ந்தவர்களும் பெரும் எண்ணிக்கையில் பங்கு கொண்டுள்ளனர்.

யுத்தம் காட்டுப்பகுதியில் நடப்பதால் போர் முனையில் நிற்பவர்களுக்குப் பொது மக்கள் ஆர்வத்துடனும், அச்சமின்றியும் பலவித உதவிகளையும் செய்து வருகின்றனர்.

இதேவேளை ஸ்ரீலங்கா விமானப் படையினர் நாசகார எரிகுண்டுகளை வீசி வருகிறார்கள். அவர்கள் வீசும் எரிகுண்டுகள் மின்னல் வேகத்தில் வந்து பெரும் சத்தத்துடன் விழுந்து எரிகின்றன. அதனால் காடுகள் தீப்பற்றி எரிந்து அழிகின்றன. எரிகுண்டுகள் விழுந்து வெடிக்கும் சத்தம் 20 மைல் தொலைவுக்கு அப்பாலும் கேட்கிறது.

விமானப் படையினர் இம்முறை புதிதாக வாங்கப்பட்ட விமானங்களையும் குண்டு வீசப் பயன்படுத்துகின்றனர்.

## காட்டுப் பிரதேசம் தீப்பற்றி எரிகிறது!

லண்டன், செப். 17

மணலாறுப் பகுதியில் ஸ்ரீலங்கா விமானப் படைகள் இடைவிடாது நடத்தி வரும் விமானக் குண்டு வீச்சினால் அடர்ந்த காட்டுப் பிரதேசம் தீப்பற்றி எரிவதாக பி.பி.ஸி. நேற்றிரவு தெரிவித்தது.

இந்தத் தாக்குதல்களினால் அப்பகுதியைச் சூழவுள்ள பிரதேசங்களில் குடியிருக்கும் மக்கள் ஆயிரக்கணக்கில் இடம் பெயர்ந்து வருவதாக வவுனியாவுக்குக் கிடைக்கும் செய்திகள் தெரிவிப்பதாகவும்—

மணலாறு சிங்களக் குடியேற்றப் பகுதிகளுக்கு அருகில் இருக்கும் சிறிய இராணுவ

[4 ஆம் பக்கம் பார்க்க]

## விடுதலைப் புலிகளுக்கு எதிராக மன்னிப்புச் சபை தெரிவித்த குற்றச்சாட்டுகள் தவறானவை

### வெளிநாட்டுப் பிரதிநிதிகளிடம் மாத்தயா விளக்கம்

யாழ்ப்பாணம், செப். 17

விடுதலைப் புலிகளுக்கு எதிராக சர்வதேச மன்னிப்புச் சபை தெரிவித்துள்ள குற்றச் சாட்டுக்கள் முற்றிலும் தவறானவை.

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணித் தலைவர் திரு கோ. மகேந்திரராஜா (மாத்தயா) நேற்று முன்தினம் தம்மைச் சந்தித்த வெளிநாட்டுப் பிரதிநிதிகளிடம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பிரிட்டனில் இயங்கும் கிறிஸ்தவ உதவி நிறுவனத்தின் [Christian Aid] பணிப்பாளர் டாக்டர் மைக்கேல் ரெய்லர், ஜேர்மனியில் இயங்கும் உலகுக்கான உணவு நிறுவன [Bread for the World] பிரதிநிதி இங்கிரிட் ஒஸ்ரர்மான் ஆகியோரே இந்த இரு வெளிநாட்டுப் பிரதிநிதிகளும் ஆவர்.

இராணுவ நடவடிக்கையால் பாதிக்கப்பட்ட இடங்களைப் பார்வையிடவும் உதவிகள் வழங்குவது பற்றி ஆராயவும் கடந்த வியாழக்கிழமை யாழ்ப்பாணம் வந்த இந்த இரு வெளிநாட்டுப் பிரதிநிதிகளும் நேற்று கொழும்பு திரும்பினர்.

அவர்கள் இருவரும் நேற்று முன்தினம் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணித் தலைவர் திரு மகேந்திரராஜா (மாத்தயா)வுடன் நடத்திய சந்திப்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## பிரதேச வாரியாக தினமும் திலீபன் அஞ்சலி கூட்டங்கள்

தியாகி திலீபனின் நான்காம் ஆண்டு நினைவை முன்னிட்டு, விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின், மக்களுறவு, கொள்கை முன்னெடுப்புப் பிரிவு குடாநாடெங்கும், பிரதேச ரீதியாக அஞ்சலிக் கூட்டங்களை நடத்துவதற்கு ஏற்பாடு செய்துள்ளது. இம்மாதம் 26 ஆம் திகதி வரை இக்கூட்டங்கள் நாள்தோறும் நடைபெறும்.

இந்தக் கூட்டங்களில விடுதலைப் புலிகள் இயக்கப் பிரமுகர்கள் பலரும் கலந்து கொண்டு சொற்பொழிவாற்றுவார்கள்.

இன்று 17 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை, பின்வரும் இடங்களில அஞ்சலிக் கூட்டங்கள் நடைபெறும்.

★ வலிகாமம் பிரதேசத்துக்குரிய கூட்டம், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில்— இரவு 7 மணிக்கு.

★ தீவகப் பிரதேசத்துக்குரிய கூட்டம், மண்கும்பான் சிவகாமி அம்மன் ஆலய முன்றலில் — இரவு 6.30 மணிக்கு

★ வடமராட்சி பிரதேசத்துக்குரிய கூட்டங்கள் கெருடாவில் அ. த. க. பாடசாலையில் — காலை 10 மணிக்கும், கரவெட்டி சரஸ்வதி வித்தியாசாலையில் — பிற்பகல் 4 மணிக்கும்

★ தென்மராட்சிப் பகுதிக்குரிய கூட்டம், எழுதுமட்டுவாள் மகா வித்தியாலய இல் —இரவு 7 மணிக்கு. [அ]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அறிவித்தல்

யாழ். பல்கலைக்கழகம்,
இலங்கை.

பட்டப்பின் கல்வி டிப்ளோமா/ முதுகலைதத்துவ மாணி தகுதிகாண் பரீட்சை

**அனுமதி அட்டை 1990**

14-11-91 இல் ஆரம்பமாகவுள்ள பட்டப்பின் கல்வி டிப்ளோமா பகுதி 1, 11 பரீட்சார்த்திகளுக்கும் மீள் பரீட்சார்த்திகளுக்கும் பரீட்சை அனுமதி அட்டைகள் அவர்களது சொந்த முகவரிக்கு அனுப்பப்பட்டுள்ளன. முதுகலைமாணி தகுதி காண் தேர்வு பரீட்சார்த்திகள் தங்களது பரீட்சை அனுமதி அட்டைகளை நேரில் வந்து தேர்வுக் கிளையில் பெற்றுக் கொள்ள வேண்டும்.

பதிவாளர்
12-09-91 (சி/0557)

---

## அறிவித்தல்

யாழ்ப்பாணம்
பல்கலைக்கழகம்,
இலங்கை

1990/91 ஆம் கல்வி ஆண்டிற்கு இராமநாதன் நுண்கலைப்பிரிவு

புதிய மாணவர்களைப் பதிவு செய்தல்

இராமநாதன் நுண்கலைப் பிரிவிற்கு 1990/91 ஆம் கல்வி ஆண்டிற்கு தெரிவு செய்யப்பட்ட புதிய மாணவர்கள் 1991 – 10 – 09 ஆம் திகதி புதன்கிழமை மு. ப. 9 30 மணிக்கு யாழ். பல்கலைக்கழகத்தில் பதிவு செய்து கொள்ளலாம். தெரிவு செய்யப்பட்டவர்களது சொந்த முகவரிக்குப் பதிவு செய்தல் பற்றிய கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன.

பதிவு செய்வதற்குப் பின்வரும் மூலப் பிரதிகளைக் கொண்டு வருதல் வேண்டும்.

1. பிறப்புச் சான்றிதழ் (முழுநகலில்லாத)
2. க. பொ. த. (உயர் தர) பரீட்சை சான்றிதழ்
3. வட இலங்கை சங்கீத சபைச் சான்றிதழ் – 4ஆம் தரம்
4. புகைப்படப் பிரதிகள் 08 (பாஸ்போட் அளவு)
5. தேசிய அடையாள அட்டை

பதிவுக் கட்டணம் ரூபா 110/-

பதிவாளர்.
12-09-91 (சி 0556)

---

## சமையலாளர்கள் தேவை

சைவ, அசைவ உணவுகள் மிகவும் தரமான முறையில் செய்யத்தக்கவராகவும் மற்றும் சிற்றுண்டி வகைகளும் செய்பவர்களும் உடன் தேவை. அனுபவம் திறமைக்கேற்ப சம்பளம் வழங்கப்படும். 17-9-91 முன் நெல்லியடி ம. ம. வித்தியாலயத்திற்கு அருகாமையில் உள்ள குடும்ப நலன் காப்பகத்தில் தொடர்பு கொள்ளவும்.

(17917)

---

## 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி



இம்மையில்:
21 - 09 - 1906

மறுமைக்குள்:
17 - 09 - 1988

**வின்ஸ்லோ சுகிர்தரட்ணம்**
(இளைப்பாறிய நீர்ப்பாசன பொறியியலாளர்)

நானே உயிர்த்தெழுதலும்
ஜீவனுமாயிருக்கிறேன் - என்னை
விசுவசிக்கிறவன் மரித்தாலும் பிழைப்பான்.
யோவான் 11 : 25

அன்பு மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

"ராணி இல்லம்"
உடுவில்.

[18178]

---

## 7ஆம் மாத நினைவஞ்சலியும் அந்தியேட்டி கிரியையும்



மலர்வு:
16 — 12 — 1959

மறைவு:
07 — 02 — 1991

அமரர்
**சீதாராம் நாயுடு சுப்பையா [ரவி]**

அன்பின் வடிவே, பாசத்தின் பிறப்பிடமே
அரிய எங்கள் பொக்கிஷமே! ரவியே!
துன்ப நினைவலே சோர்ந்து நிலை குலைந்தோம்
நெஞ்சம் கலங்கி நெகிழ்கின்றோம் இப்போதும்
உன் நினைவோடு – எம்
உயிர் கலந்து நிற்குதையா
மாதங்கள் ஏழு மறைந்தாலும் – எம்
மனமெல்லாம் உன் நினைவால் வாடுதையா.

அந்தியேட்டிக் கிரியைகள் இன்று 17-09-1991இல் அன்னாரது இல்லத்தில் நடைபெறும்.

உமது பிரிவால் வாடும்:
மனைவி, மகன், பெற்றோர்,
சகோதர, சகோதரிகள், மைத்துனர்,
மருமக்கள், நண்பர்கள்.

47, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

(18164)

---

## ★ திருமண வரவேற்புபசாரம் ★

### புதுமணத் தம்பதிகள்

| | |
|---|---|
| திரு. கந்தையா இதயசிவதாஸ்<br>ஆசிரியர்<br>யாழ்ப்பாணக் கல்லூரி,<br>வட்டுக்கோட்டை | திருமதி மீனலோஜினி இதயசிவதாஸ்<br>ஆசிரியர்,<br>உருத்திரபுரம்,<br>ம. வி. |

திகதி: 21 – 09 – 1991

நேரம்: மாலை 3 00 மணி

இடம்: தட்டான்குள வீதி, (நகுலன் வீதி), புத்தூர்ச் சந்தி, கொடிகாமம்.

இவ் வைபவத்தில் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மே/பா. திரு.
ச. செல்லத்துரை,
புத்தூர்ச் சந்தி, கொடிகாமம்.

திரு.
வே. சுந்தையா,
(மருதங்கேணி)

(18176)

---

## வெளிவாரிப் பட்டப்படிப்பு

யாழ். பல்கலைக்கழகம்

இதற்கான விரிவுரைகள் யாவும் 21-09-1991 காலை 8 மணிக்கு ஆரம்பமாகும்.

பேராதனை பல்கலைக்கழகத்திற்குரிய விரிவுரைகள் 05-10-1991 காலை 8 மணிக்கு ஆரம்பமாகும்.

நிர்வாகி,

**புதிய உயர் கல்லூரி,**
ஆரியகுளம் சந்தி,
யாழ்ப்பாணம்.

(சி-0535)

---

## முக்கிய அறிவித்தல்

நீண்ட இடைவெளிக்குப் பின் அசல் ஆர்.வி.ஜி. பீடிகள் விற்பனைக்கு வந்துள்ளன. அசல் ஆர்.வி.ஜி. பீடிகள் கூடுதல் பச்சை, நீலம் கலந்த வர்ண பண்டல் கட்டு லேபல்களில் வெளிவருகின்றன.

★ அசல் ஆர். வி. ஜி. பீடிகளில் 12 பீடிகள் கொண்ட கட்டுகள் வெள்ளை லேபல்களில் வெளிவருவதில்லை.

★ போலி பீடிகளை வாங்கி ஏமாறாமல் அசல் ஆர். வி. ஜி. பீடிகளை கேட்டு வாங்குங்கள்.

ஆர். வி. ஜி. நிர்வாகம்.
59, நல்லூர் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.

[18174]

---

அநேகரின் வேண்டுகோளுக்கிணங்க

## அரசாங்க எழுதுனர் சேவை கிராம அலுவலர் (G.S.) சேவை

போட்டிப் பரீட்சைக்கான

**2ஆவது துரித பயிற்சி வகுப்புகள்**

ஆரம்பம்: 21 - 09 - 1991 பி.ப. 2 00 மணி

பாடநெறி:
மொழித்தேர்ச்சி, பொதுஉளச்சார்பு, பொதுஅறிவு

விண்ணப்பம் படிவங்களை நேரில் பெறலாம்,
விண்ணப்ப முடிவுத் திகதி: 30 – 09 – 1991

★ அச்சடித்த பாடக் குறிப்புகள்
★ கட்டணம் ரூபா 200/- முழுப்பயிற்சிக்கும்
★ விரிவுரைகள் சனியும், ஞாயிறும்

**ASTAN INSTITUTE**
101/10, STANLEY ROAD, JAFFNA.
(... நல்லூர் ... அருகாமையில்) (சி 0520)

---

## தாண்டிக்குளம்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

குளத்து அருகில் பொதி ஒன்றில் வைக்கப்பட்டிருந்த குண்டே வெடித்திருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகிறது. வவுனியா செல்லும் பயணிகள் அப்பகுதியில் காத்திருந்த போது திடீரென குண்டு வெடித்ததாகக் கூறப்பட்டது. (உ–3)

---

## காணவில்லை

### செல்வராசா மனோதகுமார்

மட்டுவில் தெற்கு, சாவகச்சேரியைச் சேர்ந்த செல்வராசா மனோதகுமார் என்ற 14 வயது சிறுவனை 10 - 09 - 1991 முதல் காணவில்லை. மட்டுவில் மகாவித்தியாலயத்தின் ஆண்டு 9 மாணவரான இவர் கடைசியாகக் காணப்பட்டபோது நீல நிறக் காற்சட்டையும், கறுப்பும் சிவப்பும் கலந்த பெரிய செக் சேட்டும் அணிந்திருந்தார். இவரது தாயார் மனநோயால் பீடிக்கப்பட்டிருக்கிறார். இவரைப் பற்றித் தகவல் தெரிந்தோர் மட்டுவில் தெற்கு சந்திரபுர ஸ்கந்தவரோதய மகாவித்தியாலய கொத்தணி அதிபர் திரு. ஏ. பீ. செல்லையா அவர்களுக்கு அல்லது எமக்கு அறியத் தருமாறு தயவுடன் கேட்டுக் கொள்கிறோம்.

செல்வராசா தர்மதேவி,
(பெற்றோர்)
செ. ருஷ்யந்தினி, செ. கஜந்தினி,
[மட்டுவில் மகாவித்தியாலய மாணவிகள்- சகோதரிகள்].

மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி.

[18178]

---

## அமெரிக்க இலங்கை மிஷனின் 175 ஆவது ஆண்டு நிறைவுக் கொண்டாட்டங்கள்

எம் மக்கள் மத்தியில் சேவை புரிந்து வரும் அமெரிக்க இலங்கை மிஷனின் (தற்போதைய யாழ். தென்னிந்திய திருச்சபையின்) 175 ஆண்டுகள் நிறைவைக் குறிக்கும் வகையில் பின்வரும் நிகழ்ச்சிகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

1. **செப்டம்பர் 20ஆம் திகதி வெள்ளி கொடி தினம்**
   இது முன்னைய மற்றும் தற்போதைய அமெரிக்கன் மிஷன் பாடசாலைகள், ஸ்தாபனங்கள் ஆகியவற்றில் நடைபெறும்.
2. **செப்டம்பர் 21ஆம் திகதி சனி**
   காலை 8.30 மணி
   — சிறப்பு வழிபாடு உடுவில் தென்னிந்திய திருச்சபையில்
   காலை 10.30 மணி
   — சிறப்பு கலை நிகழ்ச்சிகள் உடுவில் மகளிர் கல்லூரியில்
   மாலை 2.30 மணி
   — தெல்லிப்பழையிலுள்ள மிஷனரிமாரின் கல்லறையில் மலர் வளையம் வைத்தல்
   மாலை 4.00 மணி
   — இலங்கை கிறிஸ்தவ இறையியல் கல்லூரியின் புதிய விடுதிக் கட்டட திறப்பு வைபவமும் பொதுக் கூட்டமும் கிறிஸ்தவ இறையியற் கல்லூரி மருதனாமடம், சுன்னாகம்
3. **செப்டம்பர் 22ஆம் திகதி ஞாயிறு**
   சிறப்பு வழிபாடும் சிறப்பு நிகழ்ச்சிகளும் இது சபை யாழ். தென்னிந்திய திருச்சபைகளிலும் இடம் பெறும்.
4. **செப்டம்பர் 23ஆம் திகதி திங்கள்**
   யாழ். தென்னிந்திய திருச்சபை ஆசன ஆலயம் வட்டுக்கோட்டையில்
   காலை 8.30 மணி
   — நன்றி செலுத்தும் திருவிருந்து ஆராதனை
   காலை 11.00 மணி
   — மிஷன் கூட்டமும் கலை நிகழ்ச்சிகளும்
   மாலை 2.30 மணி
   — பொதுக் கூட்டம் (இதில் உள்ளூர், வெளி நாட்டுப் பிரமுகர்கள் கலந்து கொள்வார்கள்)

அனைத்து நிகழ்ச்சிகளுக்கும் அனைவரும் அழைக்கப்படுகின்றீர்கள்.

அருள் திரு. அ. ஜெயக்குமாரன்
செயலாளர்
யாழ். தென்னிந்திய திருச்சபை.

[சி-0527]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமைதிப்படையால் பாதிப்புற்ற தனு

# ராஜீவை வஞ்சம் தீர்த்திருக்கலாம்

## உதயன்

### அரசியல் தீர்வும் இராணுவமும்

சமாதான முயற்சி தோல்வி அடைந்து விட்டது. ஆகையால் இனிமேல் விடுதலைப் புலிகளை ஒழிக்கும் வரை போர் தொடரும். இவ்வாறு இராணுவத் தளபதி ஹமில்டன் வனசிங்க கூறியிருக்கிறார்.

விடுதலைப் புலிகள் பேச்சுவார்த்தைக்கு இணங்கினாலும் "ஈழம்" தொடர்பான தமது நிலையிலிருந்து இறங்கவில்லை. இதனால் சமாதானப் பேச்சுக்கள் சிறிதளவு நன்மையே தரும் — என்றும் அவர் தெரிவித்திருக்கிறார்.

இராணுவத் தளபதி ஒருவர், அரசியல்வாதியாக மாறிக் கருத்துத் தெரிவித்திருக்கிறார்! அரசாங்கத் தலைமைப் பீடத்தின், முப்படைகளின் பிரதம தளகர்த்தரான ஜனாதிபதியின் உத்தரவுகளை சிரமேற்கொண்டு நடவடிக்கைகளை எடுக்க வேண்டிய இராணுவத் தளபதி, தானே ஜனாதிபதியின் தரத்தில் நின்று அரசியல் கருத்துக் கூறுகிறார்!

அரசியல் நிர்வாகத் தலைவர் எடுக்க வேண்டிய முடிவை, இராணுவத் தளபதி மேற்கொண்டு அதனைச் செயற்படுத்த இருப்பது, இராணுவம் அரசாங்கத்தை விட மேலோங்கி நிற்பதை, மேலாதிக்கம் நிறைந்திருப்பதைச் சந்தேகத்துக்கு இடமின்றி நிருபிக்கிறது!

அத்தகைய இராணுவ மேலாதிக்க நிலை இருப்பதினாலேயே, கொழும்பில் அரசமைப்புச் சம்பந்தமாகப் பெரும் போர் நடந்து கொண்டிருக்கும் போது மணலாறில், நித்திகைக்குளத்தில் பெரும் ஆளணி, ஆயுத பலத்துடன் இராணுவம் யுத்தத்தைத் தொடங்கி இருக்கிறது!

கொழும்புப் போரில் சம்பந்தப்பட்ட இரு சாராரும் அரசியல் பதற்றத்துடனும், பயத்துடனும் நெஞ்சடியுடன் பொழுதைக் கழிக்கும் போது —

அவற்றைப் பற்றி எவ்வித அக்கறையோ, சிரத்தையோ காட்டாது, அரசமைப்புப் போரின் முடிவு தெரியும்வரை கூட காத்திராமல், இராணுவம் தான் நினைத்த மாதிரி மணலாறு யுத்தத்தைத் தொடங்கி இருக்கிறது!

புலிகளை ஒழிக்கும்வரை போர் கடைசி வரை தொடரும் என்று இராணுவத் தரப்பில் கூறப்படுவது இது முதல் முறையல்ல. 1987 ஆம் ஆண்டு தொடக்கம் இந்தச் சூத்திரத்தையே அவர்கள் பாடம் பண்ணி வருகிறார்கள்.

ஆனால் மக்கள் ஆதரவு கொண்ட ஒரு விடுதலைப் படையை அழித்துவிடுவது என்பது இலகுவான காரியமல்ல. இப்போதைக்கு நடக்கக் கூடியதும் அல்ல. அவர்கள் வெட்ட வெட்டத் தழைப்பார்கள். இது உலக வரலாறு தரும் பாடம். விடுதலைப் புலிகளுக்கும் பொருந்தும்.

இந்த உண்மையை இராணுவ அதிகாரிகள் இலகுவில் உணரமாட்டார்கள். ஏனெனில் அவர்கள் இராணுவக் கண்ணுடனேயே உலகத்தைப் பார்ப்பவர்கள்.

ஆகவே இனப்பிரச்சினைக்கு இப்போதைக்கு ஓர் அரசியல் தீர்வு ஏற்படுவது கடினமாகவே இருக்கப் போகிறது. அதற்கான வாய்ப்பு உண்டாகும் வேளைகளிலும், இராணுவ அதிகாரிகள் தமது மேலாண்மை நிலையைப் பிரயோகித்து, அரசியல் தலைவர்களையும் திசை மாற்றிவிடுவார்கள்; குழப்பிக்கொண்டே இருப்பார்கள். கடந்த ஜனவரியிலும் இதுவே நடந்தது. உலகம் இதை உணர்ந்துகொண்டால் சரி.

---

ராஜீவ் காந்தி கொலையில் 'மனிதக்குண்டு' ஆகப் பயன்பட்டதாகக் கூறப்படும் தனு என்ற பெண் பற்றி இந்தியாவில் இருந்து வரும் 'புரொண்ட்லைன்' சஞ்சிகை வெளியிட்ட தகவல்கள் வருமாறு:-

சிவராசனின் கார்ச் சாரதியாகவும், மெய்ப்பாதுகாவலராகவும் பணியாற்றி வந்த ரங்கன் சமீபத்தில் கைது செய்யப்பட்ட போது அவரை இந்திய உளவுத் துறையினர் துருவித்துருவி விசாரித்தனர். அப்போது பல உண்மைகளை அவர் வெளியிட்டார். இவற்றில் முக்கியமான ஒன்று, தனுவைப் பற்றியது.

சிவராசன் தனுவையும், சுபாவையும் இந்தியாவுக்குக் கூட்டி வந்த போது அவர்களுடன் ஒரே படகில் வந்தவர் இந்த ரங்கன்.

ராஜீவ் காந்தியைத் தீர்த்துக் கட்டும் இறுதித் திட்டம் பற்றி ஆலோசிக்கப்பட்ட போது தனுவே முன்வந்து 'நானே குண்டினை இடுப்பில் கட்டிக்கொண்டு ராஜீவைத் தீர்த்துக் கட்டுகிறேன்' என்று சிவராசனிடம் கூறினார் என்கிறார் ரங்கன்.

இந்தத் தனுவைப் பற்றிய பின்னணி விவரங்கள் தெளிவாகத் தெரியவில்லை.

## 'புரொண்ட்லைன்' சஞ்சிகை தகவல்

இந்திய அமைதிகாக்கும் படையால் தனுவும் அவர் குடும்பமும் பாதிப்புற்ற போது ராஜீவ் காந்தியை வஞ்சம் தீர்க்கும் வெஞ்சினம் அவருள் ஏற்பட்டிருக்கலாம் என்பது தனுவைப்பற்றிய ஒரு கண்ணோட்டமாகும்.

விடுதலைப் போராட்டத்துடன் தம்மை இணைத்துக் கொண்ட யாழ் மக்களுக்குப் பரிச்சயமான - ஏ. ராஜரத்தினத்தின் புதல்வியே தனு என்று கூறப்படுகிறது.

ராஜரத்தினம் புலிகளின் தலைவர் வே. பிரபாகரனின் அரசியல் குருவாக விளங்கியவர். பிரபாகரனை 1972—75 ஆம் ஆண்டு காலப் பகுதியில் உருவாக்கியவர் வில் இவரும் ஒருவர். இப்படி புலிகள் இயக்கத்தின் அடித்தளத்தை உருவாக்கிய ஒருவரின் மகளே இந்தத் தனு என்று கூறப்படுகிறது.

கடந்த ஜூன் 10-ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் புலிகள் முத்தமிழ் விழாவினை நடத்தினர். அந்த விழாவில் பிரபாகரனே நேரில் கலந்து கொண்டு கலை மற்றும் சமூக சேவைகளை மேற்கொண்ட எண்மருக்கு சிறப்பு விருதுகளை வழங்கினார். இவர்களில், ராஜரத்தினம் பெயரிலும் விருது வழங்கப்பட்டது.

ராஜரத்தினம் சென்னைக்கு வந்திருந்தபோது ஆஸ்துமா நோயால் தாக்கப்பட்டு 1975 ஆம் ஆண்டு மரணமடைந்தார். ஆனால் 16 ஆண்டுகள் கழித்துக் கடந்த ஜூன் மாதம் இவருக்குப் புலிகள் திடீரென கௌரவ விருது வழங்க வேண்டிய அவசியம் என்ன?

தனுவைக் கௌரவிக்கும் சாக்கிலேயே அவரது தந்தைக்குப் புலிகள் கௌரவம் வழங்கினர?

—இப்படி கேள்விக்குறியுடன் 'புரொண்ட்லைன்' சஞ்சிகை தனு பற்றிய கட்டுரையை முடித்துள்ளது. [இ-உ]

## திறப்பு விழா

யாழ்ப்பாணம், செப். 17

தென்மராட்சிப் பிரிவு தமிழீழ ஆரம்ப நீதி மன்ற திறப்பு விழா இன்று செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு நடைபெறவிருக்கிறது. (உ-3)

## வீரமரணம்

யாழ்ப்பாணம், செப். 17

மணலாறு மாவட்டத்தில் தொடர்ந்து நடைபெற்று வரும் உக்கிரச் சண்டையில் நேற்று முன்தினம் விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த ஐந்து போராளிகள் வீரமரணமடைந்தனர்.

வில்லியம் — (இராஜகோபால் விபவகானந்தன் — மூதூர்), மலர்விழி — (இருபாதேவி மயில்வாகனம் - மூதூர்), பரந்தாமன் — (அருளானந்தம் அமிர்தராஜ் — கொகுவில்), ஜெகன் — (ஜெயநாதன் ஜெரோம் — யாழ்ப்பாணம்), இந்திரன் — (இராசையா பஞ்சலிங்கம் — கிளிநொச்சி) ஆகியோரே வீரமரணமடைந்தனர்.

அதற்கடுத்த 10-ஆம் திகதி நடைபெற்ற சண்டையில் ஜான் — (திருநாவுக்கரசு சாந்தகுமார் — தொண்டமானாறு), வசீசன் — (செல்லையா தயாளன் — சரவெட்டி), ரஞ்சன் — (செல்லத்துரை ரவிச்சந்திரன் — நாவலடி) ஆகிய போராளிகளும் வீரமரணமடைந்தனர். (உ)

## இரு கைகளையும் இழந்த பெண் போராளி கால்களினால் சன்னங்களை நிரப்புகிறார்

### பயிற்சி முகாமில் நேரில் கண்டதாக பி. பி. ஸி. செய்தியாளர் வர்ணனை

லண்டன், செப். 17

"ஸ்ரீலங்கா இராணுவத்திற்கு எதிரான சண்டையில் தனது இரண்டு கைகளையும் இழந்த விடுதலைப் புலிகளின் பெண் போராளி ஒருவர், துப்பாக்கிக்குத் தேவையான சன்னங்களை தனது இரண்டு கால்களாலும் மாற்றிப் போட்டு நிரப்புவதை வட பகுதியிலுள்ள புலிகளின் பயிற்சி முகாம் ஒன்றில் கண்டேன்."

அண்மையில் வடபகுதிக்கு விஜயம் செய்த பி. பி. ஸியின் கொழும்புச் செய்தியாளர் கிறிஸ் மொரிஸ் பி. பி. ஸி. சிங்கள ஒலிபரப்பின் ஸ்ரீலங்கா சண்டேணட்டத்தில் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது:-

வடபகுதிக்கு நான் சென்றபோது அங்கு பெண் போராளிகளுக்கு பயிற்சி அளிக்கும் முகாம் ஒன்றுக்கும் போயிருந்தேன். அங்கு இருநூறுக்கும் மேற்பட்ட பெண்கள் பயிற்சியில் ஈடுபட்டிருந்தனர்.

ஆனையிறவு யுத்தத்தின் பின்பும் அவர்கள் மனம் தளர்ந்து விடவில்லை.

அங்கு சண்டையில் தனது இரண்டு கைகளையும் இழந்த ஜெயா என்ற பெண் போராளியை நான் சந்தித்தேன். அவர் மிகவும் சந்தோஷமாகக் காணப்பட்டார். தனது வாயினால் பேனா ஒன்றைப் பிடித்து எழுதப் பழகிக் கொண்டிருந்தார். தனது இரண்டு கால்களாலும் துப்பாக்கி சன்னங்களை மாற்றி மாற்றி துப்பாக்கியில் நிரப்பிக் கொண்டிருந்தார்.

விடுதலைப் புலிகள், போராடுவதை மட்டுமே சிந்தையாகக் கொண்ட மனித இயந்திரங்கள் அல்லர். அவர்களும் உணர்ச்சி உள்ளவர்களே. இராணுவப் பயிற்சி அல்லாத நேரங்களில் அவர்கள் சிரித்து சந்தோஷமாக இருப்பதைக் காணமுடிந்தது. —என்றும் அவர் தெரிவித்தார். [உ-த]

## தேச சொத்துக்களை அபகரிக்கும் கூட்டம்; லலித் குழு குறித்து பிரேமா வர்ணனை

தேசச் சொத்துக்களை அபகரித்துவரும் கூட்டம் என்னைத் 'துரத்த' முயற்சிக்கின்றது. உண்மையில் அவர்கள் என்னைத் துரத்திவிடுக்க முயற்சிக்கவில்லை; நாட்டின் அப்பாவி மக்களையே அவர்கள் துரத்திவிடுக்கப் பார்க்கின்றார்கள்.

யாப்பஹுவாவில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற கூட்டம் ஒன்றில் ஜனாதிபதி பிரேமதாஸா பேசும்போது இவ்வாறு கூறினார்.

அவர் அங்கு தொடர்ந்து பேசியதாவது;

தேசச் சொத்துக்களைக் கொள்ளையடிக்க அக்கூட்டத்தினரை நான் அனுமதிக்கவில்லை. அதனால் நான் அவர்களுக்குக் கூடாதவனாகிவிட்டேன்.

டீ. எஸ். சேனநாயக்காவை பிடித்துக்கொண்டு ஒருவர் எம்மையும், முன்னாள் ஜனாதிபதி ஜெயவர்த்தனாவையும் ஏமாற்றினார். பாதுகாப்பு அமைச்சராக இருந்த அவரால் ஜே. வி. பியினரை அடக்கமுடியவில்லை. நான் பதவிக்கு வந்த ஓராண்டு காலத்தில் ஜே. வி. பியை அடக்கினேன். அன்று அவர்கள் பெரிதாகப் பேசினார்கள்.

கடந்தமுறை தங்களால் அவர்கள் இரகசியமாக அணைத்தையும் செய்தார்கள், அவர்களுக்கு சுயமரியாதை இருந்திருப்பின் முதுகில் குத்தாமல் பகிரங்கமாகச் செயற்பட்டிருக்க வேண்டும். முதுகில் குத்துவதில் எமக்கு நம்பிக்கையில்லை. மக்கள் முகங்களில் அசிட் திராவகம் வீசுவதிலும் எமக்கு நம்பிக்கை கிடையாது.

இன்று எமது கட்சிக்குள் ஒரு சிறு வர்க்கபேத அடிப்படையில் நிறுவ அவர்கள் முயற்சிக்கிறார்கள். அவர்களிடம் இலட்சியங்களே கிடையாது! சலுகைகளை இழந்துவிட்டோம் என்ற ஆத்திரம்தான் அவர்களிடம் இன்று உள்ளது.

சிறிய குழு ஒன்றினால் என்னை பதவியில் இருந்து அகற்றிவிட முடியுமா?

—இப்படி திரு. பிரேமதாஸா சொன்னார். (த-எ)

## புலிகள் ஆதரவுக் கூட்டம்: மதுரையில் 31 பேர் கைது

சென்னை, செப். 17

மதுரையில் விடுதலைப் புலிகளுக்கு ஆதரவளிக்கும் கூட்டம் ஒன்றை நடத்த முயற்சித்ததாகக் கூறப்படும் 31 பேரை கடந்த சனி, ஞாயிறு ஆகிய தினங்களில் தமிழகப் பொலிஸார் முன் எச்சரிக்கையாகக் கைது செய்தனர். (இ-எ)

### தொலைபேசி பரிவர்த்தனை இயந்திரம்:

## வடபகுதிக்கு வாங்கப்பட்டது தென் பகுதி செல்கிறது

கொழும்பு, செப். 17

யாழ்ப்பாணத்தில் பொருத்துவதற்காக பெறப்பட்ட 500 இணைப்புகளைக் கொண்ட தொலைபேசிப் பரிவர்த்தனை இயந்திரம் தென் பகுதியில் உள்ள ஹிக்கடுவையில் நிறுவப்படவுள்ளது.

தொலைத் தொடர்புத் திணைக்கள அதிகாரி ஒருவர் இதனைத் தெரிவித்தார்.

இப்புதிய தொலைபேசிப் பரிவர்த்தனை இயந்திரம் ஜப்பானின் தேசிய எலக்ரிக் கம்பெனியினால் தயாரிக்கப்பட்டது.

வடபகுதியில் போர் நிலை நீடிப்பது காரணமாகவே ஹிக்கடுவைக்கு அந்த பரிவர்த்தனை இயந்திரம் அனுப்பப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (இ-எ)

### தியாகத்தேன்: 3

மூன்றாம் நாளில்
முழங்கினான் பேச்சு - அதுவே
தமிழினத்தின் மூச்சு - புரட்சி
அலை எழுப்பும்
மின்சார வீச்சு - அதைக்கேட்டு
வெளுறியது...
இந்தியாவின்
போலி அகிம்சைப் பூச்சு!

— வாஞ்சிநாதன்

(தியாகி திலீபனின் நினைவாக)

### மன்னிப்புச்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

பின் போது பல்வேறு விடயங்கள் பகிர்ந்து கொள்ளப்பட்டன.

தற்போதைய பிரச்சினையில் வெளிநாடுகள் மத்தியஸ்தம் செய்ய வேண்டுமானால் கைதிகளைப் பராமரிப்பது தொடர்பாக விடுதலைப் புலிகள் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும் என்று வெளிநாட்டுப் பிரதிநிதிகள் தெரிவித்த போதே, சர்வதேச மன்னிப்புச் சபையின் குற்றச்சாட்டுக்களுக்கு திரு. மகேந்திரராஜா மறுப்புத் தெரிவித்தார்.

"அரசாங்கத்தின் கட்டுப்பாடு இங்கு இல்லாததால் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டும் பொறுப்பு எங்களிடம் விடப்பட்டுள்ளது. ஆகவே களவு, கொலை போன்ற சமூகவிரோதச் செயல்களைப் புரிவோரைக் கைது செய்து, காவலில் வைப்பது தவிர்க்கமுடியாததாகி விட்டது. இப்படியான கைதிகள் நல்ல முறையில் கவனிக்கப்படுகிறார்கள். அவர்களை உறவினர்கள் சென்று பார்க்கவும் அனுமதிக்கப்படுகிறது." என்றும் திரு. மாத்தயா வெளிநாட்டுப் பிரதிநிதிகளுக்கு விளக்கம் அளித்தார்.

வெளிநாட்டு மத்தியஸ்தம் என்று கூறும் போது காமன்வெல்த் நாடுகள் அல்லது ஸ்கண்டிநேவிய நாடுகள் மத்தியஸ்தம் செய்வதை நாம் வரவேற்பதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பின் போது விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி செயலாளர் நாயகம் திரு. யோகரத்தினம் யோகி, மெதடிஸ்த திருச்சபையைச் சேர்ந்த வண. ஏ. டபிள்யூ ஜெபநேசன் ஆகியோரும் சமுகம் அளித்திருந்தனர். (இ)

### பிரேமாவிற்கு...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

யிருக்கின்றேன். இந்த நிலையில் ஜனாதிபதியால் பாராளுமன்றத்தை தற்போது கலைத்துவிட முடியாது"— இப்படி சபாநாயகர் முகம்மது ஜனாதிபதி பிரேமதாஸாவுக்கு எழுதிய பதிலில் கூறியிருக்கிறார். [உ-எ]

### லலித் ஆதர...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

எங்கே இருக்கின்றார் என விசாரித்ததாகவும் கூறினார்.

திரு. லலித் பேசும்போது, மாளிகாவத்தையிலுள்ள தனது பெண் ஆதரவாளர் ஒருவர் தாக்கப்பட்டு முறிவுகளுடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் என்றார்.

தாங்கள் நடத்திய கூட்டத்தில் கலந்து கொண்டவரை முற்ற சிகரட் விற்பனையாளர் ஒருவரின் வண்டில் அவரிடம் இருந்து பறிக்கப்பட்டதாகவும் லலித் தெரிவித்தார். (த)

### தமக்குள்ள...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

வும் சில உறுப்பினர்கள் முறையிட்டனர்.

பெரு நாட்டுக்கு தான் விஜயம் செய்தது குறித்து தனக்குத் தெரியாமலேயே இரகசிய அறிக்கை ஒன்று தயாரிக்கப்பட்டதாக ஓர் உறுப்பினர் மாநாட்டில் குறிப்பிட்டாராம்.

பேச்சு நடந்து கொண்டிருக்கும் சமயத்தில் விடுதலைப் புலிகளுக்கு ஆயுதங்கள் வழங்கப்பட்டதாகக் கூறப்படும் விடயம் பற்றியும் மாநாட்டில் ஆராயப்பட்டதாக தெரிகிறது.

இது பற்றி கமிட்டி ஒன்று ஆராய்ந்து வருவதாகவும் அங்கு தெரிவிக்கப்பட்டது. (இ-எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கட்சி முடிவை ஏற்று நடக்க ஸ்ரான்லி இணங்கினார்!

ஜனாதிபதி மீது கொண்டு வரப்பட்டுள்ள அரசியல் குற்றப்பிரேரணை தொடர்பாக கட்சியின் முடிவை ஏற்று நடக்கப்போவதாகசுதந்திரக் கட்சி எம். பியும் முன்னாள் சபாநாயகருமான ஸ்ரான்லி திலகரத்தினா அறிவித்திருக்கிறார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்—

''நான் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினன். கட்சியின் வளர்ச்சிக்காக நான் உழைப்பேன். கட்சியின் ஒழுங்கு முறைகளை மீறமாட்டேன்'' — என்றார்.

''ஜனாதிபதிக்கு எதிரான பிரேரணையில் கூறப்பட்டிருந்த பாரதூரமான குற்றச்சாட்டுக்களை நான் வாசிக்க வேண்டியிருந்ததாலேயே அதில் உடனடியாக நான் கையெழுத்திடவில்லை.'' என்றும் அவர் சொன்னார்.

குற்றப் பிரேரணையில் கையொப்பமிட மறுத்ததற்காக திரு. திலகரத்தினா கட்சியில் இருந்து இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளார் என்பது தெரிந்ததே. [உ-எ]

# அதிருப்தியாளர் அணியுடன் சிறிமாவோ குழு பேச்சு

கொழும்பு, செப். 17

ஐ. தே. கட்சியில் இருந்து வெளியேற்றப்பட்ட எட்டு எம்பிக்களையும் மற்றும் ஐ. தே. க. எம்பிக்கள் சிலரையும் எதிர்க்கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா உட்பட எதிர்க்கட்சித் தலைவர்கள் கடந்த 12 ஆம் திகதி சந்தித்துப் பேசினர்.

அச் சந்திப்பு ''இந்திய ஹவுஸ்'' இல் இடம் பெற்றது.

இடமாற்றம் பெற்றுச் செல்லும் சிரேஷ்ட இந்திய ராஜதந்திரி ஒருவருக்கு இந்தியா ஹவுஸில் வைத்து அளிக்கப்பட்ட பிரிவுபசார வைபவத்தின் போது அச் சந்திப்பு இடம்பெற்றதாக தெரிவிக்கப்படுகிறது. (இ-எ)

## மரண அறிவித்தல்கள்

### டியூலிப் மகேஸ்வரன் காசிப்பிள்ளை

வண்ணார்பண்ணையைச் சேர்ந்தவரும் முன்னாள் இலங்கை வங்கி (மூதூர்) முகாமையாளருமான திரு. டியூலிப் மகேஸ்வரன் காசிப்பிள்ளை 13-09-91 வெள்ளிக்கிழமை அன்று திருகோணமலை காலமானார்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
திருமதி சித்தா பொன்னுத்துரை
66/2 யா. இ. ச. ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.
(சி/0517)

### திருமதி சிவசுப்பிரமணியம் அமிர்தம்மா

காலம் சென்ற சிவசுப்பிரமணியத்தின் [ஓவசியர்] அன்பு மனைவி அமிர்தம்மா காலமாகிவிட்டார். அன்னார் சிவமலர், யோகேஸ்வரன், தனஞ்செயன் [தனம் மாஸ்டர்], சியாமளாதேவி, யசோதாதேவி, காலஞ்சென்ற புரந்திராதேவி ஆகியோரின் அன்புத் தாயாரும், சோமசுந்தரம், காலஞ்சென்ற இரத்தினம், அன்னலிங்கம் ஆகியோரின் அருமைச் சகோதரியும், தில்லைநடராஜன் [ஓய்வு பெற்ற சிறைச்சாலை உத்தியோகத்தர்], ரங்கநாதன், ஜெரின், ராதிகா ஆகியோரின் மாமியும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று [17-9-91] அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக முற்பகல் 10.00 மணியளவில் செம்மணி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:
ந. தில்லைநடராஜன்
5 ஆம் கட்டையடி, கல்வியன்காடு,
யாழ்ப்பாணம்.
[C/0559]

### திருமதி சோமேஸ்வரி யோகநாதன்
(ஆசிரியை)

நயினாதீவைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், திருகோணமலை கோணேசபுரத்தை வதிவிடமாகக் கொண்டவருமான திருமதி சோமேஸ்வரி - யோகநாதன் ஆசிரியை 15-9-91 இல் திருகோணமலையில் காலமாகிவிட்டார். இவர் யோகநாதனின் [துறைமுக அதிகார சபை - திருகோணமலை] அன்பு மனைவியும், பாமதி, அகிலன், சாருமதி [கிழக்கு பல்கலைக்கழகம்] உமாமதி [வேம்படி மகளிர் கல்லூரி], சுடர்மதி [ஸ்ரீ சண்முக வித்தியாலயம், திருமலை] ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற நடராசநாதன் செல்லம்மா தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற விசுவலிங்கம் நாகம்மா தம்பதிகளின் அன்பு மருமகளுமாவார். அன்னாரின் தகனக்கிரியைகள் திருகோணமலை இந்து மயானத்தில் 16-9-91 இல் நடைபெற்றன என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகிறேன்.

தகவல்:
வி. சபாநாதன் J. P.
101/2, ஒட்டுமடம் வீதி,
வண்ணார்பண்ணை.
[18179]

# கனடா அனுப்பிய நிவாரண உணவு பழுதடைந்த நிலையில் கிளிநொச்சிக்கு!

யாழ்ப்பாணம், செப் 17

கனடாவில் உள்ள உதவி வழங்கும் நிறுவனம் ஒன்று யாழ்ப்பாணத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்காக கப்பலில் அனுப்பிய உணவுப் பொருள்கள் ஆறு மாதங்களுக்கு மேல் கொழும்பில் தடுத்து வைக்கப்பட்ட பின்னர், தற்போது பழுதடைந்த நிலையில் கிளிநொச்சியில் உள்ள புனர்வாழ்வு நிறுவனம் ஒன்றுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

கனடாவில் உள்ள சிறுவர் பாதுகாப்பு நிதியம் இந்த உணவுப் பொருள்களை அனுப்பி இருந்ததும், இது தொடர்பாக நாடாளுமன்றத்தில் கேள்விகள் கேட்கப்பட்டதும் தெரிந்தவையே.

இந்த உணவுப் பொருள்கள் யாழ்ப்பாணத்தில் உள்ள மெதடிஸ்த திருச்சபை ஊடாக விநியோகிப்பதற்கென்றே பிரஸ்தாப கனேடிய உதவி வழங்கும் நிறுவனத்தினால் அனுப்பி வைக்கப்பட்டிருந்தன.

உணவுப் பொருள்கள் போராளிகளுக்கு வந்திருக்கலாம் என்று சந்தேகிக்கப்பட்டதால் கொழும்பில் மெதடிஸ்த திருச்சபைத் தலைவர்கள் இரகசியப் பொலிஸ் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டனர்.

கனடாவில் உள்ள பிரஸ்தாப உதவி வழங்கும் நிறுவனத்துடன் புனர்வாழ்வு அமைச்சு இது தொடர்பாகத் தொடர்பு கொண்ட பின்னர் அந்த உணவுவகைகள் கிளிநொச்சிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

## அஸாமில் இராணுவம்

புதுடில்லி, செப். 17

அஸாம் ஐக்கிய விடுதலை முன்னணி (உல்பா) தீவிரவாதிகளுக்கு எதிராகப் போராடுவதற்காக அஸாம் மாநிலத்தில் ஞாயிறு முதல் இந்திய இராணுவம் அழைக்கப்பட்டிருக்கிறது.

அஸாம் மாநில அரசின் அழைப்பை ஏற்று இராணுவப் படையை மத்திய அரசு அந்த மாநிலத்துக்கு அனுப்பி வைத்திருக்கிறது. (உ)

## செனட்சபை நிராகரிப்பு

மணிலா, செப். 17

சுபிக் வளை குடாவில் அமெரிக்க கடற்படைத் தளத்தை தொடர்ந்து வைத்திருக்க வழி செய்யும் உடன்படிக்கையை பிலிப்பீன்ஸ் செனட் சபை நிராகரித்திருக்கிறது.

உடன்படிக்கையை நிராகரிப்பதற்கு ஆதரவாக 12 பேர் வாக்களித்தனர். எதிர்த்து 11 உறுப்பினர்கள் வாக்களித்தனர்.

செனட் சபை முடிவை மாற்றி அமைப்பதற்காக எதிர்வரும் டிசம்பரில் சர்வசன வாக்கெடுப்பு நடத்தப் போவதாக ஜனாதிபதி கொரஸோன் அக்கினோ அறிவித்திருக்கிறார். (உ-எ)

## யூகோ. விமானம் வீழ்த்தப்பட்டது

பெல்கிறேட், செப். 17

சுதந்திரப் பிரகடனம் செய்துள்ள குரோஷியா மாநிலக் குடியரசுப் பிரதேசம் மீதாக பறந்த யூகோஸ்லேவிய சமஷ்டி விமானப் படையின் விமானம் ஒன்று நேற்று சுட்டு வீழ்த்தப்பட்டதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது.

குரோஷியா மாநிலத்தின் படையினர் அவ்விமானத்தை சாம் ஏவுகணையால் சுட்டு வீழ்த்தினரா அல்லது எல்லைப்புற நாடான ஹங்கேரியில் இருந்து நடத்தப்பட்ட ஏவுகணைத் தாக்குதலில் அவ் விமானம் வீழ்ந்ததா என்பதைக் கூறமுடியாதிருப்பதாக யூகோ சமஷ்டி இராணுவம் தெரிவித்தது [உ-எ]

### நிரு ரியூசன் சென்ரர்
ஸ்ரேசன் றோட்,
கோண்டாவில்.

5ஆம் ஆண்டு புலமைப் பரிசில்.

6ஆம் ஆண்டு அனுமதி பரீட்சைக்கான முன்னோடிப் பரீட்சை

21-09-1991 சனி பி.ப. 2.00 மணிக்கு நடைபெறும் (பாடங்கள் தமிழ், கணிதம், ஆங்கிலம்).

* 19-09-1991 ற்கு முன் பதிவு செய்யவும்

- நிர்வாகி.

(சி/0516)

## சுவிஸ் பிரதிநிதி யாழ். வருகை

சுவிஸ் உதவி வழங்கும் நிறுவனம் ஒன்றின் பிரதிநிதி திரு. றெனாத்தோ மீண்டும் யாழ்ப்பாணம் வந்துள்ளார்.

அறவழிப் போராட்டக் குழுவுடன் இணைந்து வட பகுதியில் பல அபிவிருத்தி வேலைகளை இந்த உதவி வழங்கும் நிறுவனம் மேற்கொண்டு வருவது தெரிந்ததே. [இ]

## காட்டுப்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

நிலையங்கள் மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தலாம் என்று எதிர்பார்க்கப்படுவதாகவும் அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டது.

மணலாறுச் சண்டையில் காயமடைந்த பல நூற்றுக்கணக்கான படையினரால் கொழும்பு ஆஸ்பத்திரி நிரம்பி வழிவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதற்கிடையில்—

காட்டுப்பகுதியில் இடம்பெறும் குண்டுவீச்சுகளினால் அப்பகுதியில் உள்ள காட்டு மிருகங்களும் கூட்டம் கூட்டமாக இடம் பெயர்ந்து வருவதாக மற்றொரு செய்தி தெரிவித்தது.

## மணலாறு...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

அரசப் படையினர் கடும் எதிர்த்தாக்குதலை எதிர்நோக்க வேண்டியிருப்பதாக இராணுவ அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதேவேளை—

மணலாறுச் சண்டையில் நேற்று முன்தினம் அதிக எண்ணிக்கையான படையினர் உயிரிழந்ததாகவும்—

அவர்களில் இருவரின் சடலங்களையும் பெருமளவு ஆயுதங்களையும் தாங்கள் கைப்பற்றியதாகவும் விடுதலைப் புலிகள் வட்டாரங்கள் தெரிவித்தன.

விடுதலைப் புலிகளினால் கைப்பற்றப்பட்ட ஆயுதங்களின் விவரம் வருமாறு:-

★ ரி.56—2 ரகத் துப்பாக்கிகள் — 4
★ அதற்குரிய ரவைக் கூடுகள் — 7
★ ரி.81 ரகத் துப்பாக்கி—1
★ அதற்குரிய ரவைக் கூடுகள் — 2
★ எல் 3 தொடர் ரவைகள் — 100
★ ஏ. கே. எல். எம். ஜி தொடர் ரவைகள்—474
★ 40 மி. மீ. ஷெல்கள்—6
★ நடுத்தர ரவைகள் — 1,700
★ ஜே. ஆர். ரகக் கைக்குண்டுகள் — 6

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நிறைவேற்று ஜனாதிபதி ஆட்சி:

# ஜே. ஆர் - பிரேமா ஆதரிக்க டட்லி அப்போது எதிர்த்தார்

நிறைவேற்று ஜனாதிபதி ஆட்சி முறையை இலங்கையில் அமுல் நடத்துவது பற்றிய முயற்சி 1972 இல் ஐ. தே. க. செயற்குழுக் கூட்டத்தில் முதன்முதலாக மேற்கொள்ளப்பட்டபோது அதனை எதிர்த்து முன்னாள் பிரதமர் திரு. டட்லி சேனநாயக்கா வாக்களித்தாராம்.

டாக்டர் நீலன் திருச்செல்வம் கொழும்பில் நடந்த கருத்தரங்கு ஒன்றில் பேசுகையில் இதனைத் தெரிவித்தார்.

ஜனாதிபதி ஆட்சிமுறை பற்றி 1972 இல் ஐக்கிய தேசியக் கட்சிச் செயற்குழுக்கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது.

அப்போது ஜனாதிபதி ஆட்சி முறையை ஆதரித்து முன்னாள் ஜனாதிபதி ஜெயவர்த்தனாவும், தற்போதைய ஜனாதிபதி பிரேமதாஸவும் மட்டுமே வாக்களித்தனர். திரு. டட்லி சேனநாயக்கா அதனை எதிர்த்து வாக்களித்தார் என்றும் நீலன் திருச்செல்வம் கூறினார். (இ-எ)

# மாமனிதர் கலைஞானியின் அரும்பொருள் கண்காட்சி

யாழ்ப்பாணம், செப். 17

மாமனிதர் கலைஞானி அவர்களின் மாபெரும் அரும்பொருள் கண்காட்சி எதிர்வரும் 27 ஆம் திகதி முதல் அக்டோபர் மாதம் 6 ஆம் திகதி வரை யாழ். பல்கலைக்கழக நூல்நிலைய மண்டபத்தில் காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணி வரை நடைபெறும்.

யாழ் பல்கலைக்கழக இந்து மன்றத்தின் ஆதரவில் நடைபெறும் இந்தக் கண்காட்சியில், ஈழத் தமிழரின் நாகரித வரலாற்றைச் சித்திரிக்கின்ற பழைமை வாய்ந்ததும், பல்துறை சார்ந்ததுமான அரும்பொருள்களான தொல்லியற் சின்னங்கள், கலை, பண்பாடு, இலக்கியம், சமயம், வைத்தியம், சோதிடம், அரசியல் போன்ற பல துறை சம்பந்தப்பட்ட அரிய வரலாற்றுப் பொக்கிஷங்கள் தமிழ் மக்களின் பார்வைக்கு வைக்கப்படவுள்ளன.

இக்கண்காட்சி மூலம் சேகரிக்கப்படும் பணம், கலைஞானி அரும்பொருள் காட்சி மண்டபம் ஒன்றை நிரந்தரமாக அமைக்கப் பயன்படுத்தப்படும். [த]

## மருந்து களஞ்சிய விறாந்தையில் பண்டேஜ் பெட்டி

யாழ்ப்பாணம், செப் 17

யாழ். போதனா வைத்திய சாலை மருந்துக் களஞ்சியத்தின் விறாந்தையில் இருந்து கடந்த செவ்வாய்க்கிழமை சுமார் 12 ஆயிரம் ரூபா பெறுமதியான பி. ஓ. பி பண்டேஜுகள் அடங்கிய பெட்டி ஒன்று கண்டெடுக்கப்பட்டதாம்.

பெட்டி உடைக்கப்பட்டு சிறு தொகை பண்டேஜுகள் எடுக்கப்பட்டிருந்தன. மருந்துக் களஞ்சியத்தின் பாதுகாப்பில் இருக்கவேண்டிய பெறுமதி மிக்க இந்தப் பொருள் வெளியே காணப்பட்டது குறித்து வைத்திய வட்டாரங்கள் அதிருப்தி தெரிவித்தன. (த-15)

## இலங்கையும் அங்கீகாரம்

கொழும்பு, செப். 17

சுதந்திரம் பெற்ற போல்டிக் குடியரசுகளான லித்துவேனியா, எஸ்தோனியா, லத்வியா ஆகிய நாடுகளை இலங்கையும் அங்கீகரித்துள்ளது.

வெளியுறவுத் துணை அமைச்சர் ஜோன் அமரதுங்கா இதனை அறிவித்திருக்கிறார்.

இதற்கு முன்னர் திரு. அமரதுங்கா கொழும்பில் உள்ள சோவியத் தூதரக பொறுப்பதிகாரியைச் சந்தித்துப் பேசினார். (இ-எ)

## 60ஆண்டின் பின் ஆளும் கட்சி தோல்வி

சுவீடனில் கடந்த ஞாயிறு இடம்பெற்ற நாடாளுமன்ற தேர்தலில் அறுபது ஆண்டுகளாக நாட்டை ஆண்டு வந்த சோஷலிச ஜனநாயகக் கட்சி தோல்வி அடைந்தது.

## ஐ. சோ. அணி வெற்றிடத்தை நிரப்ப முயற்சி

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான தேசியப் பட்டியலில் வெற்றிடமாக உள்ள ஐக்கிய சோஷலிச அணியினருக்குரிய எம். பி. ஸ்தானத்தை நிரப்ப அந்த அணியினர் தற்போது நடவடிக்கை எடுத்து வருகின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

கடந்த நாடாளுமன்றப் பொதுத் தேர்தலில் தேசியப் பட்டியல் மூலம் ஐக்கிய சோஷலிச அணிக்குக் கிடைத்த எம். பி ஸ்தானம் அந்த அணியினால் இன்னும் நிரப்பப்படாமல் இருந்து வருகிறது.

அந்த அணிக்குள் நிலவும் கட்சிக் கருத்து வேறுபாடுகள் காரணமாக எவரை அந்த எம். பி பதவிக்கு நியமிப்பது என்பதில் இழுபறிநிலை ஏற்பட்டு இருப்பதே இதற்குக் காரணமாகும். (இ-எ)

## அறிவித்தல்

எமது நிறுவனமாகிய சூர்யா மருந்தகத்திலிருந்து சென்ற வெள்ளி இரவு (13-9-91) ரூபா 60 000/- பெறுமதியான மருந்துகள், பால்மாவகைகள் மற்றும் பிஸ்கட் வகைகள் களவாடப்பட்டுள்ளன. இக் கொள்ளை போன பொருள்களை கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் மாவட்டங்களில் விற்பனை செய்வதற்கு கொள்ளையர்கள் முயற்சிக்கக்கூடும். எனவே இம்மாவட்டத்தைச் சேர்ந்த தனியார் வைத்தியர்கள், தனியார் மருந்தகங்கள் உங்களுக்கு யாராவது சந்தேகத்திற்கு இடமானவர்கள் மருந்துகள் மற்றும் பொருள்கள் விற்பனை செய்ய வந்தால் உடன் அறியத் தருமாறு வேண்டுகிறோம்.

நன்றி

சூர்யா மருந்தகம்,
மத்திய சந்தை முன்பாக,
பிரதான வீதி, புத்தூர்.

நிர்வாகத்தினர்

(18180)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிகேசன்(பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 17 - 09 - 1991 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.